22nd November 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அத்தகைய நிலைமைகளை கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் நேற்று விளக்கி எடுத்துத் தெரிவித்தேன். பத்திரிகைகளிலே, பல்வேறு செய்தித் தாள்களிலே பல்வேறு முறைகளில் அறிக்கைகள் வந்திருக்கிற காரணத்தினாலே, கழகம் முடிவெடுக்காத முடிவுகளைப்பற்றி பல பத்திரிகைகள் தெரிவித்துக்கொண்டிருப்பதினாலே, ஒவ்வொரு செய்தித்தாளிலும் வெளிவருகிற முரண்பாடான கருத்துக்களை அறிக்கைவிட்டு மறுத்து கவனத்திற்குக்கொண்டு வருவதற்கு அவகாசம் இல்லாத காரணத்தினாலும், கழகம் எடுத்த நடவடிக்கைகள் இன்னென்ன, போக்குகள் இன்னென்ன என்பதை தெளிவுபடுத்தி, அதற்குப்பிறகு அந்த ஐயப்பாட்டை நீக்குவதற்கு நாங்கள் முயன்றோமே தவிர, அதன்மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுங்கள் என்ற முறையில்தான் கழகத்தின் சார்பாக நான் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தெளிவுபடுத்தினேன். அந்த முறையில்தான் எரிப்புப் போராட்டம், மறியல் போராட்டம் எந்தெந்த முறைப்படி நடக்கும் என்று நாங்கள் அறிவித்திருக்கிறோமோ அந்தந்த முறைப்படி நடைபெறும், எந்த நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், முன்கூட்டியே அறிவித்துவிட்டு செல்வோம், ஏற்கனவே மறியல் போராட்டம், எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக இருப்பவர்கள் இதை மீறுவதாக இல்லை, இப்பொழுது கழகத்தினுடைய நோக்கம் 144 தடை உத்தரவை மீறுவது என்பது அல்ல, ஏற்கனவே எரிப்பு, மறியல் போராட்டத்தில் கலந்து கொள்வதாக பெயர் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் 144 தடை உத்தரவை மீறுவதாக இல்லை, அந்த முறையில் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மறியல், எரிப்புப் போராட்டத்தில் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் தான் கலந்து கொள்வார்களே தவிர, இப்பொழுது எரிப்பு, மறியல் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றோ, தடையை மீறுவார்கள் என்றோ ஐயப்பாடு அரசினருக்கு வேண்டாம், அந்த அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ளுங்கள் என்று நான் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தெளிவுபடுத்தினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

IV.—PRIVILEGE MATTER *re*: NON-COMMUNICATION OF INFORMATION ABOUT ARREST OF A MEMBER.

திரு. இராம. அரங்கண்ணல்: நேற்றைய தினம் கனம் உறுப்பினர் திரு. ஸ்ரீராமுலு கைது செய்யப்பட்டது குறித்து நான் உரிமைப் பிரேரபணைக் கொடுத்திருந்தேன். நான் தங்களிடம் இந்த உரிமைப் பிரச்னையை காலையில் 8-51-க்கு எழுப்பியிருந்தேன். பிறகு அந்த உறுப்பினர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நேரத்தில் 10-48-க்கு தகவல் வந்ததாக நம்முடைய துணைச் சபாநாயகர் அவர்கள் அறிவித்தார்கள். நேற்று அவர் 4 மணிக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார். இரவு 12

மணிக்கு அங்கேயிருந்து தங்களுக்கு தகவல் அனுப்பப்பட்ட தாகக் கூறப்படுகிறது. இப்படி இஷ்டம்போல் கைது செய்வதும், தங்களுக்கு உடனடியாக ......

கனம் சபாநாயகர் : காலை 10-40-க்கு எனக்குத் தகவல் வந்தது அவருடைய arrest -ஐப் பற்றி. இரவு தகவல் வந்தது. அவரை release செய்ததுபற்றி . . . .

திரு. இராம. அரங்கண்ணல் : நான் இங்கே இந்தப் பிரச்னையை எழுப்பிய பிற்பாடு அரசாங்கத்தின் சாமர்த்தியத்தினுலோ அல்லது வேறு என்ன காரணத்தினுலோ தங்களுக்கு தகவல் வர வழைக்கப்பட்டிருக்கிறது. நான் எழுப்பிய உரிமைப் பிரச்னை என்ன ஆயிற்று என்பதுபற்றி நான் அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : I will give a ruling.

* **திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, நண்பர் திரு. ஸ்ரீராமுலு அவர்கள் கைதான விஷயம் பற்றி நான் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். என்னுடைய உரிமைப் பிரேரே பணையில் இரண்டு கருத்துக்களை எழுப்பியிருக்கிறேன். முதலாவ தாக, சட்டசபை விதிகளின்படி 'நான்-கம்யூனிகேஷன்' என்ற உரிமைக்குள் இது வரும். குறிப்பிட்ட நேரத்தில் அங்கத்தினர் கைதான செய்தி இந்த மன்றத்திற்கு அறிவிக்கப்படவில்லை. அது ஒரு உரிமையாகும் என்பது ஏற்கனவே பாராளுமன்றத்திலும், ஹவுஸ் ஆப் காமன்ஸிலும், நம்முடைய சட்டமன்றத்திலும்கூட முடிவு ஆகியிருக்கின்றது. இந்த நேரத்தில் நான் ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே இந்தச் சபை எந்த முடிவு எடுத்திருந்தாலும்கூட, ஒவ்வொரு பிரச்னையும் வரும்பொழுது இந்தச் சபை மீண்டும் பரிசீலிக்க உரிமை உண்டு என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த முறையில் பார்க்கும்பொழுது அங்கத்தினரை கைது செய்ததைப் பற்றி எப் பொழுது இந்த சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்பதை நாம் மறுபடியும் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கத்தினரைக் கைது செய்வதுபற்றி உரி மைப் பிரச்னை வந்தபொழுது முதலில் ஒரு பெரிய வழக்காக வந்தது 1940-ல் வந்த காப்டன் ராம்ஸே கேஸாகும். அந்த வழக் கில் குறிப்பிடப்பட்ட ஒரு பகுதியை நான் இங்கே நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

" The chief, if not the only privilege of Parliament in such cases seems to be the right of receiving immediate information of the imprisonment or the detention of any member with the reasons for which he is detained. "

என்ற உரிமை 1940-ல் ஹவுஸ் ஆப் காமன்ஸில் ஒப்புக் கொள்ளப் பட்ட உரிமையாகும். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டப் படி ஹவுஸ் ஆப் காமன்ஸுக்கு என்ன உரிமைகள் கொடுக்கப்பட் டிருக்கின்றதோ அதே உரிமைகள் நம்முடைய சட்டமன்றத்திற் கும் உண்டு என்பதை நான் சொல்லத் தேவையில்லை. ஆகவே, அங்கத்தினர் கைது செய்தது பற்றி எந்த நேரத்திலே தெரிவிக்க

22nd November 1963] *[திரு. செ. மாதவன்]*

வேண்டுமோ, எவ்வளவு விரைவாக தெரிவிக்க வேண்டுமோ அப்படி தெரிவிக்கப்படாததற்குக் காரணம் என்ன, அந்த அளவுக்கு ஸப்-இன்ஸ்பெக்டரோ அல்லது மற்ற போலீஸ் அதிகாரியோ அவருக்கு சட்டம் தெரியாத நிலேயோ, அல்லது சபையை அவமதிக்கவேண்டுமென்ற நிலேயா என்ற ஒரு நிலேயை பரிசீலிக்க வேண்டும் என்று நான் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்து நான் கிளப்பியுள்ள பிரச்னே, 'அப்ஸ்ட்ராக்ஷன் டு மெம்பர்ஸ்'. அதாவது, சட்டசபை கூட்டம் நடந்துகொண்டிருக் கும்பொழுது ஒரு அங்கத்தினர் தன்னுடைய பணியிலே ஈடு படுவதை தடைப்படுத்தும் எண்ணம் கொண்டு போலீசாரோ அரசினரோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தடுப்ப தற்கு முயற்சித்தால் அது தவறு என்பது தங்களுக்குத் தெரிந்த செய்தி தான். அதனல், இதுபற்றி நாம் தீர விசாரித்து ஒரு முடிவு கட்டவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். குறிப்பாக, இது விஷயமாக 'ஹவுஸ் ஆப் காமன்ஸ் கமிட்டி ஆப் ப்ரிவிலேஜ்' ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. மிஸ்டர் ஜான் லூயிஸ் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மிகத் தெளிவாகக் கூறப் பட்டிருக்கிறது.

"The privilege of freedom from obstruction in coming to or going from the House is derived from the undoubted right of Parliament to the full service of its members. . . . . . According to Erskine May. 'It is a breach of privilege to molest a Member of either House while attending such House or coming to or going from it. "

நண்பர் ஸ்ரீராமுலு அவர்கள் இந்தச் சபையின் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு, தன்னுடைய வீட்டிலே நடைபெறுகின்ற ஒரு விசேஷத்தில் கலந்துகொள்ளுவதற்காக அங்கே சென்ருர். அவர்கள் சட்டசபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்காக திரும்பிவர முற்படும்பொழுது, அவர் கைது செய்யப்பட்டார் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படி ஒரு அங்கத்தினர் இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்காக வரும்பொழுது, அவரை தடுப்பதா என்பது ஒரு பிரச்னே. அந்தப் பிரச்னே இங்கே தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். இதைப் பற்றிப் பேசும்பொழுது, ஒரு கருத்தை எடுத்துக் கூறலாம். கிரிமினல் குற்றம் யாராவது செய்தால். அவர்களே இந்த உரிமைப் பிரச்னே தடுக்காது, அவர் களுக்கு இந்த உரிமை இல்லே என்று பாரம்பரியமாக இருந்து வந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனல் அவர் சட்டசபைக்கு வரும்பொழுது, அப்படிப்பட்ட குற்றம் செய்யாமல் இருக்கும்பொழுது அவரைக் கைது செய்திருக் கிருர்கள்.

1953-ம் வருஷம், ஜூலே மாதம் 20-ம் தேதி நம்முடைய சட்ட மன்றத்திலே இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அப் பொழுது இந்த மன்றத்தின் தலைவர், அது பற்றி நேரடியாக எதுவும் சொல்லாமல், தம்முடைய தீர்ப்பிலே ஒரு குறிப்பை

[திரு. செ. மாதவன்] [22nd November 1963

இறுதியிலே கொடுத்திருக்கிறார். "சட்டசபை நடக்கும்போது என்றால் வேறு பிரச்னை, இப்பொழுது சட்டசபை நடக்காத பொழுது ....." என்று சொல்லிவிட்டு, ஹைதராபாத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்பை வைத்து ஒரு ஆப்ஸர்வேஷன் செய்திருக்கிறார்கள் :

"The House was not in Session on 27th May 1952 and Srimathi Arutla Kamala Devi was neither going to the Assembly nor coming from he Assembly. As such this privelege also cannot be claimed by her."

என்று முன்னாள் மன்றத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே 1953-ம் வருஷம் ஜூலை மாதம் 20-ம் தேதி எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னை சட்ட மன்றம் கூடி இருக்கும்போது அல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு சட்ட மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது, சட்ட மன்றத்திற்கு வந்து திரும்பியவரைக் கைது செய்திருப்பதனால், இந்த மாதிரிப் பிரச்னையில் நாம் ஒரு முடிவுக்கு வரவில்லை என்று கருதுகிறேன். நமது மன்றத் தலைவர் அவர்கள் இந்தக் கருத்தை மேலும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் வேறு ஒரு வாதத்தையும் சொல்லலாம். ப்ரீச் ஆப் பீஸுக்கு இடமிருக்கிறது என்ற ஐயப்பாடு இருந்ததனால் கைது செய்யலாமென்று சொல்லக் கூடும். குற்றம் செய்வதாக ஒரு நபர் அறிவிக்காதபொழுது, அவர் குற்றம் செய்யமாட்டார் என்று தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அரசாங்கத்தின் தூண்டுதலினாலோ அல்லது போலீசாரே கைது செய்திருக்கிறார்கள் என்ற நிலையையும் பரிசீலிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். பிளாக்ஸ்டோன் என்பவர் "இண்டிக்டபிள் அபென்ஸ்" யாராவது செய்திருந்தால், அதற்காக உரிமை பறிபோகப்படலாமென்று சொல்லியிருக்கிறார்.

MR. SPEAKER : What is meant by indictable offence?

திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட "இண்டிக்டபிள் அபென்ஸ்" செய்தாரா என்று பிரச்னை இருக்கிறது. அரசாங்கம் திடீரென்று ஒருவரைக் கைது செய்து, மறுபடியும் திடீரென்று விடுதலை செய்திருக்கிறது. அதிலிருந்தே அவர் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை, செய்வதற்கு முயல்வதாகவும் தெரியவில்லை என்பதை ஊகித்துக் கொள்ளலாம். ஆகவே திரு. சீராமுலு அவர்கள் எந்த விதமான குற்றத்தையும் செய்யவில்லை என்பதை நாம் ஒப்புக் கொண்டால், வேண்டுமென்றே, அவருடைய உரிமையைப் பறிப்பதற்காக, திட்டமிட்டு, அரசாங்கத்தின் தூண்டுதலினாலோ அல்லது போலீசாரோ கைது செய்திருக்கிறார்கள். இந்த சபையின் அங்கத்தினர் சபைக்கு வரும்பொழுது, எந்தவிதமான குற்றமும் செய்யாமல் இருக்கும்பொழுது, அவரைக் கைது செய்திருப்பதானது அவருடைய உரிமையையும், இந்தச் சபையின் உரிமையையும் பாதிப்பதால், அதைத் தடுப்பதற்கு இந்த மன்றத்திற்கு அதிகாரம் உண்டா என்பதைப் பரிசீலித்து, முடிவு கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

22nd November 1963]

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதிலே உரிமைப் பிரச்னை ஒன்றும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முன்பு கூறியதுபோல், சட்ட மன்ற உறுப்பினர் கைது செய்யப் பட்டதற்குக் காரணம் இருக்கிறது. விடுதலை செய்யப்பட்டதற் கான காரணத்தையும் விளக்கினேன். அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்துவது என்பது பெரிய குற்றம். அதிலிருந்துதான் இது நேர்ந்தது. அப்படி குற்றம் செய்வதைத் தடுப் பதற்காக தடை உத்தரவு போடப்பட்டது. அந்த உத்தரவை மீறப் போகிறோம், 23, 24-ம் தேதிகளில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப் போகிறோம் என்று அவர்கள் பிரகடனம் செய்திருக் கிறார்கள். அதிலே பலர் ஈடுபட்டிருப்பதாக போலீசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படி ஈடுபடுபவர்களில் சட்ட மன்ற உறுப் பினர்கள் இருந்தால், அவர்கள் இப்படிப்பட்ட குற்றத்தைச் செய் யட்டுமே என்று பார்த்துக் கொண்டிருப்பது கடமையைச் செய்வ தாக ஆகாது. தகுந்த காரணத்தோடுதான் கைது செய்தார்கள். நான் விளக்கியபடி, பின்னர் வேண்டியதில்லை, சட்ட மன்ற உறுப் பினர்கள் தடையை மீறமாட்டார்கள் என்று தெரிந்து, பின்னர் விடுதலை செய்தார்கள். இதிலே உரிமைப் பிரச்னை ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் திரு. மாதவன் சில மேற்கோள்களை எடுத்துக் காட்டினார்கள். சாதாரணமாக பிரிவிலேஜ் மோஷன்களைப் பற்றிப் பேசுவதற்காகத் தயார் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்னைக்கு அது ஒவ்வாது. அநேக பாயிண்டு களைச் சொல்லலாம். ஆனால் அவை எல்லாம் இதற்குப் பொருந் தாது. யாராய் இருந்தாலும், தவறான குற்றத்தைச் செய்வதோ அதைச் செய்வதற்குத் தூண்டுவதோ, தடை உத்தரவு போட்டு, அதை மீறவேண்டுமென்று சொல்லுவதோ, யார் செய்தாலும் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்த நிலைமையில் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டு, பிறகு விடுதலை செய் திருக்கிறார்கள். இதிலே உரிமைப் பிரச்னை ஒன்றும் இல்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சட்டமன்ற உறுப்பினர் திரு. சீராமுலு, தடை உத்தரவை மீறுகின்ற ஒரு கூட்டத்திலே கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ஆனால் திராவிட முன்னேற் றக் கழகத்தின் செயற்குழு, வழக்கம் போல் ஒரு பிரச்னை குறித்து நாட்டின் எல்லா இடங்களிலும் நடைபெறுகிற கூட்டங்களைப் போல "ஹிந்தி ஆதிக்க கண்டனக் கூட்டம்" என்கிற பெயரால் சுமார் 80-க்கு மேற்பட்ட நகரங்களில் கூட்டங்கள் நடைபெறும் என்றும், அவற்றிலே பேசுகின்றவர்களின் பெயர்களையும் கழக ஏட்டிலே ஒரு அறிக்கையின் மூலமாக வெளியிட்டிருந்தது. அந்தப் பட்டியல் வெளிவந்த அதே ஏடுகளில்தான் அதற்குப் பிறகு தடை யுத்தரவு அரசினரால் பிறப்பிக்கப்பட்டதையொட்டி அறிஞர் அண்ணா அவர்கள் திருவல்லிக்கேணி கூட்டத்தில் பேசிய பேச்சை யும் அதிலே குறிப்பிட்டபடி பெயர் கொடுத்தவர்கள் மறியலிலும் எரிப்புக் கிளர்ச்சியிலும் ஈடுபடமாட்டார்கள் என்றும், தடை யுத்தரவை மீறமாட்டார்கள் என்றும், மிச்சம் உள்ளவர்கள் குறிப்

பிட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் முன்னரே அறிவித்துவிட்டு கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு அறிக்கை வெளி வந்த பிறகும்கூட போலீசார் குறிப்பிட்ட சட்ட மன்ற உறுப்பினரைக் கைது செய்தார்கள். சட்ட மன்றத்திற்கு வரும் வழியில் அதுவும் அங்குள்ள போலீஸ் ஸ்டேஷனிலே சில கழக நண்பர்கள் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்டு அதனை அறிய அங்கே அவர் சென்றபொழுது திரு. சீராமுலு கைது செய்யப்பட்டுள்ளார். போலீஸ் ஸ்டேஷனிலேயே சிக்கிவிட்ட கௌரவமிக்க ஒரு சட்ட மன்ற உறுப்பினரை போலீசார் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : இந்த உரிமைப் பிரச்னை விஷயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. எந்தக் கட்சி சம்பந்தமாகவும் நான் இதை பேசவில்லை. கனம் முதலமைச்சரவர்கள் "தி. மு. கட்சியின் தலைமையிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது, அவர்கள் வார்த்தையை மீற மாட்டார்கள்" என்று சொன்னார்கள். நான் கேட்பது என்னவென்றால், அந்த அங்கத்தினர் சட்டத்தை மீறுவார் என்று போலீசார் சந்தேகப்பட்டு அவரை கைது செய்தார்களா? கைது செய்த பிறகு, அந்த அங்கத்தினர் "நான் சட்டத்தை மீற மாட்டேன்", என்று சொன்னதற்குப் பிறகு அவரை விட்டு விட்டார்களா? அந்த மாதிரி ஏதாவது உறுதிமொழி கொடுத்தபிறகு அவரை விடுதலை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member speaking on the privilege matter?

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : சம்பந்தப்பட்ட அங்கத்தினரின் விடுதலையைப் பற்றித்தான் நான் கேட்கிறேன். ஏனென்றால் முதலிலே அவரை கைது செய்து பிறகு அவரை விடுதலை செய்திருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் ப்ரிவிலேஜ் உண்டு என்று சொல்கிறார்களா அல்லது இல்லை என்று சொல்கிறார்களா?

SRI R. V. SWAMINATHAN : Sir, I want a clarification. . .

10-30 a.m. MR. SPEAKER : The hon. Member has referred not to the privilege matter but to some other matter.

SRI R. V. SWAMINATHAN : If the Chair decides so. I have no objection and I have to submit to your ruling.

MR. SPEAKER : Let the hon. Member tell me about the privilege matter.

22nd November 1963]

SRI R. V. SWAMINATHAN : I want to know from the Hon. the Chief Minister. . . .

MR. SPEAKER : I am not concerned with what the hon. Member wants to know. What is his opinion about the privilege matter now before the House?

SRI R. V. SWAMINATHAN : As a Member of the House, I have got every right to know from the Hon. the Chief Minister, what he thinks. . . .

MR. SPEAKER : He has already answered.

SRI R. V. SWAMINATHAN : To seek clarification on a point is the privilege of every Member of this House.

MR. SPEAKER : The hon. Member has asked, how the Hon. Minister can rely on the statement of the leaders and how he can order the release, taking the words of the leaders into consideration, while the concerned hon. Members are away. In short, that is what the hon. Member asked. Then the Hon. Minister answered : 'I thought that those hon. Members will obey the instructions from their leaders, and therefore I ordered their release.' There ended the matter.

SRI R. V. SWAMINATHAN : May I submit one point. When an hon. Member wants to know some information about the privilege matter, he must get it from the Hon. the Chief Minister. Then only the hon. Member can decide whether it is a privilege matter or not.

MR. SPEAKER : No, no. The point is, whether the arrest of those hon. Members is a breach of privilege. What is the hon. Member's opinion on that point?

SRI R. V. SWAMINATHAN : How can I form an opinion?

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat.

SRI V. KRISHNAMOORTHY : Sir, only one word.

MR. SPEAKER : All right.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த பிரிவிலேஜ் மோஷனிலே இருக்கிற பிரச்னை 144 தடையுத்தரவை மீறுவதற்காக இருந்தார்கள், ஆகவே போலீஸ்காரர்கள் அவர்களை கைது செய்தார்கள், என்பது சரியா என்று பார்க்க வேண்டும். இப்பொழுது 23-ம் தேதியோடு சட்டசபை முடிவு அடைகிறது என்பது தங்களுக்கும், அரசாங்கத்திற்கும் தெரியும். 23, 24-ம் தேதிகளில் தடையுத்தரவை மீறும் கூட்டங்கள் நடத்துவதுபற்றி திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கனவே அறிவித்து இருந்தது. இப்பொழு

துள்ள பிரச்னை 151-வது பிரிவுப்படி அரஸ்ட் செய்து இருப்பது, இந்த சபையை அவமதித்தது ஆகுமா இல்லையா என்பது. 151-வது செகஷனில்,

"Any Police Officer may interpose and arrest without warrant to prevent the commission of any crime."

இதுதான் கிரிமினல் புரொஸீஜர் கோடில் இருக்கும் வாசகம், போலீஸ் அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருககும் அதிகாரம். 23-ம் தேதி மாலையில் கூடடத்தில் பேச இருபபவர்களை 21-ந் தேதியே கைது செய்வது முறையா? அப்படிச் செய்வது இந்த சபையை அவமதித்தது ஆகாதா? இப்பொழுது சபை நடநது கொண்டு இருக்கிறது. 23, 24-ம் தேதிகளிலதான் குறிப்பிட்ட சட்ட மன்ற அங்கத்தினர் பேசக்கூடிய நிகழ்ச்சி வர இருக்கிறது. ஆகவே மூன்று நாட்களுக்கு முன்னதாகவே 21-ம் தேதியே போலீஸ் அதிகாரிகள் கைது செய்து இருப்பது சரியா, தப்பா. என்று கனம் சபாநாயகர் அவர்கள் சிநதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிறைய காலம் இருக்கிறது. 23-ம் தேதி மாலையிலும் அதன் பிறகும்தான் அங்கத்தினர் கலநது கொளள வேண்டிய நிகழச்சி வர இருககிறது......

MR. SPEAKER: The hon. Member wanted to say one word but he is making a speech. Let the hon. Member please resume his seat.

Now coming to the privilege matter, yesterday, hon. Members, Sri S. Madhavan and Sri Rama Arangannal gave notice of a matter of privilege that the arrest of the hon. Member, Sri P. V. Sriramulu had not been communicated to the Speaker and that it amounted to a breach of privilege and by that arrest, the hon. Member was prevented from attending the meeting of the Assembly. Three more hon. Members, Sri Mathialagan, Sri Krishnamoorthy and Sri Karivengadam have given similar notices of the privilege matter to-day. So the point is one and the same thing.

First of all, Rule 245 of the Madras Legislative Assembly Rules states that when an hon. Member is arrested, the authority effecting the arrest should inform the Speaker of the fact of arrest. In this case, when the hon. Members gave notice of the matter of privilege, the intimation of arrest had not then been received. But subsequently at 10-40 a.m. a communication from the Inspector-General of Police was received and later on at 10-48 a.m., a telegram from the Superintendent of Police, Salem, was also received. This telegram has been despatched from Salem or received at the Post Office at Salem at 8 minutes after 12 midnight, that is, 00-08 hours on 21st November 1963 and then it has reached me at 10-48 a.m. I do not know why the Postal Department took so much time and their explanation is not before me. The point for us to consider is, the interval being from 4 p.m. to 12 midnight, why they have not intimated earlier. That is all the

22nd November 1963] [Mr. Speaker]

pertinent question to be answered in regard to this matter. Under the circumstances, I do not think that the delay from 4 p.m. to 12 midnight, is a point which can be construed as a matter of privilege.

The next point is that the concerned hon. Member who has gone to his village after attending this Assembly could be arrested when he was returning to attend the meeting of the Assembly. The hon. Member, Sri Madhavan cited several rulings which were given in the House of Commons and in the Lok Sabha. I have also studied the matter and I myself had given a ruling in a matter like this, on 5th February 1963 in this House on the arrest of the hon. Member, Sri Kalyanasundaram. According to the rules of the Legislative Assembly relating to the privilege of a Member, a Member could not be arrested on a civil matter, while he is in the House or 40 days before and 40 days after, the commencement of the sitting of the Assembly. But in a matter of criminal charge or preventive arrest, that privilege cannot be extended even to hon. Members. Even the hon. Members who have been attending the House, with the permission of the Speaker can be arrested. Therefore, the question of attending the House with absolute immunity—whether going out or coming or sitting in the House—does not arise, as far as the criminal charge or preventive arrest is concerned. So, I do not think that I should give consent to this notice of privilege.

We shall now take up the Calling Attention Notice under Rule 41. The hon. Member Sri Sengaliappan may read the notice.

Sri K. A. Mathialagan rose . . .

Mr. SPEAKER: What does the hon. Member want?

Sri K. A. MATHIALAGAN: I want to raise a matter of privilege. It is urgent.

Mr. SPEAKER: For that, the hon. Member should have given me notice.

Sri K. A. MATHIALAGAN: It is so important. . .

Mr. SPEAKER: The hon. Member should have given me notice. Hon. Members should follow the rules in these matters.

Sri K. A. MATHIALAGAN: There is no rule for privilege motion, I think. It is urgent.

Mr. SPEAKER: I can sometimes understand the urgency about adjournment motions but not about privilege motions.

Sri K. A. MATHIALAGAN: On a point of order, Sir.

Mr. SPEAKER: How can a matter of privilege turn into a point of order? (laughter). When the hon. Member says 'point of order', I am bound to hear it.

Sri K. A. MATHIALAGAN : Breach of privilege had been committed. . . .

Mr. SPEAKER : It is not a point of order.

Regarding giving notice of a matter of privilege, Rule 184 of the Assembly Rules says as follows :—

"A member wishing to raise a matter of privilege shall, before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised."

What is this rule for? Can it be thrown out? The hon. Member must give me notice and then raise the matter of privilege.

V—POINT OF ORDER.

Posting of policemen in the precincts of the House.

திரு. கே. எ. மதியழகன்: On a point of order, Sir. கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தினைச் சுற்றியும், இன்னும் சபாநாயகர், காரியதரிசி போன்றவர்களுடைய அறை நெடுகிலும் போலீஸ்காரர்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறார்கள். சொல்லப் போனால் ஒரு அங்கத்தினர் தன்னுடைய கடமையைச் சரிவர ஆற்ற முடியாத வண்ணம் இந்த மன்றத்தின் பிரிசிங்ட்ஸ் என்று சொல்லத்தக்க இடங்களில் எல்லாம் கூட......

Mr. SPEAKER : The hon. Member may please put it in writing.

Sri K. A. MATHIALAGAN : It is very important and it is an invasion on the privileges of Members.

Mr. SPEAKER : When the Chair is on its legs, the hon. Member should first sit down. If the hon. Member wants to quote any rule, he must abide by the rule. If this is a matter of privilege, the hon. Member may put it in writing and give me notice, under the rules, to-day. To-morrow it will be taken into consideration.

VI—CALLING ATTENTION TO LATHI CHARGE ON WORKERS OF SOME OF THE TEXTILE MILLS AT COIMBATORE.

திரு. ஆர். செங்காலியப்பன் : கனம் தலைவர் அவர்களே, 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க் கண்ட விஷயத்தை கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்:

கோயம்புத்தூரிலுள்ள கொத்தாரி, ராஜலட்சுமி, வசந்தா ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள்மீது 1963-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதியில் நடந்த தடியடிப் பிரயோகமும் அதற்கான காரணங்களும் அவர்களைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகளும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.